# உயர்தர விநியோகஸ்தர்களை மலேசியாவுக்குக் கொண்டு வந்திருக்கிறது

## Yiwu China Commodities City






கிள்ளான், செப். 20-

உலகின் மிகப்பெரிய பொருட்கள் மொத்த வியாபார முனையம் என அங்கீகாரம் பெற்றிருக்கிறது Yiwu China Commodities City. இந்நிறுவனமானது சீனாவில் இருந்து கடல் கடந்து 26 மிகப்பெரிய விநியோகஸ்தர்களை மலேசியாவுக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதன்மூலம் உள்நாட்டு வணிகர்கள் அவர்களுடன் இணைந்து புதிய வணிகங்களைத் தொடங்குவதற்கான வாய்ப்புகளை அது ஏற்படுத்தி இருக்கிறது.

மலேசியா - சீனா இடையிலான வணிக உறவுகளுக்கு வலுவூட்டும் வகையில் Yiwu China Commodities City நிறுவனம் இந்த மாபெரும் திட்டத்தை முன்னெடுத்திருக்கிறது.

மலேசியத் தொழில்முனைவோர் Yiwu விநியோகஸ்தர்களிடம் இருந்து நேரடியாகவே உயர் தரத்திலான பொருட்களைக் கொள்முதல் செய்யலாம். மலேசியாவின் மிகப்பெரிய மொத்த வியாபார முனையமான GM Klang Wholesale City உடன் கைகோத்திருக்கிறது Yiwu.






இதன் தொடர்பான ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்து Yiwu தேர்வுகள் என பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கண்காட்சியானது ஜிஎம் கிளாங் மொத்த வியாபார முனையத்தில் நண்பகல் 12.00 மணியில் இருந்து மாலை 6.00 மணி வரை நேற்று பிரமாண்டமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

Yiwu China Commodities City நிறுவனம் சீனாவில் இருந்து 26 மிகப் பிரபலமான விநியோகஸ்தர்களை வரவழைத்திருக்கிறது. அவர்கள் பல்வேறு வகையான பொருட்களைக் கண்காட்சியில் வைத்துள்ளனர். இதன்மூலம் மலேசிய வணிகர்களைத் தங்களின் வர்த்தகப் பங்காளிகளாகக் கவர்வதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதன்மூலம் மலேசியர்கள் நேரம், பணம் போன்றவற்றைச் செலவிட்டு சீனாவுக்குச் செல்வதைவிட சீனாவே இங்கு வந்திருக்கிறது Yiwu China Commodities City நிறுவனம். மலேசிய வணிகர்களுக்கு இதனால் நேரம், பணம், பயணம் அனைத்தும் மிச்சப்படுத்தப் பட்டிருக்கிறது.

கிள்ளான் பாண்டார் பொட்டானிக் கெப்பிட்டலில் உள்ள GM Klang Wholesale City முனையத்திற்கு வருகை புரிந்து தாங்கள் ஆர்வம் கொண்டுள்ள வணிகத் துறைகளில் முதலீடு செய்யும் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். இதன் மூலம் சீனாவின் Yiwu விநியோகஸ்தர்களிடம் இருந்து நேரடியாகப் பொருட்களைத் தருவிப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பை அவர்கள் பெறுகின்றனர்.

செயற்கைப் பூக்கள், பலூன்கள், விருந்துக்கான அலங்காரங்கள், கிறிஸ்துமஸ் அலங்காரங்கள், பரிசுப் பொருட்கள், பரிசுக் கொடுப்பதற்கான பைகள், பொம்மைகள், சிகை அலங்காரப் பொருட்கள், கல்குலேட்டர்கள், கைப்பைகள், சமையல் அறைப் பொருட்கள், எழுது உபகரணங்கள், அலுவலகத்திற்குத் தேவையான உபகரணங்கள், ஆண்-பெண் குளியல் உடைகள், அரைக்கால் சிலுவார்கள், சமையல் அறை சுவர் ஒட்டிகள், சமையல் அறைப் பொருட்கள், கின்னங்கள், திரைச்சீலைகள், சோஃபா நாற்காலிகள், குஷன்கள், படுக்கை விரிப்புகள், அலங்காரப் பொருட்கள், நகப்பூச்சு போன்றவை இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றிருக்கின்றன.

சீன மொழி தெரியாதவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகளை ஜிஎம் கிளாங் மொத்த வியாபார முனையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் பல மலேசியத் தொழில்முனைவோர் சீனத் தொழில்முனைவோருடன் பல ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டனர்.

### சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தின்

# எதிர்க்கட்சித் தலைவராக அஸ்மின் அலி

ஷா ஆலம், செப். 20-

சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக உலுகிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இதனை மாநில சட்டமன்ற சபாநாயகர் லாவ் வெய் சான் நேற்று அறிவித்தார்.

அஸ்மின் அலிக்கு வாழ்த்து தெரிவித்த அவர், அவர் தமது பொறுப்பினைச் சீரான முறையில் ஆற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அஸ்மின் அலியை எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் செய்ததற்கு இம்மாதம் 15ஆம் தேதி தாம் பெரிக்காத்தான் நேஷனலிடம் இருந்து கடிதம் பெற்றதாக பந்திங் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான லாவ் கூறினார்.

இதற்கு முன்பு சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பாரிசான் நேஷனலைச் சேர்ந்த சுங்கை ஆயர் தாவார் சட்டமன்ற உறுப்பினர் ரிஸாம் இஸ்மாயில் இருந்து வந்தார்.

எனினும் கடந்த ஆகஸ்டு 12ஆம் தேதி நடைபெற்ற சிலாங்கூர் மாநில சட்டமன்றத் தேர்தலில் பாரிசான் நேஷனலும் பக்காத்தான் ஹராப்பானும் கூட்டணியாக இணைந்து



போட்டியிட்டதன் வழி அம்மாநிலத்தி லுள்ள 56 சட்டமன்றத் தொகுதிகளில் 34 இடங்களைப் பிடித்து அது மாநில அரசாங்கத்தை அமைத்தது.

லாவ் நேற்று 34 வாக்குகளைப் பெற்று சிலாங்கூர் மாநில சட்டமன்ற சபாநாயகராகத் தேர்வுபெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பாஸ் கட்சியின் சிலாங்கூர் மாநிலத் துணைத்தலைவர் முகமட் ஃபுவாட் முகமட் சாலேவுக்கு 22 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

### 3 சட்டவிரோத நாணயப் பரிவர்த்தனை வழக்குகளை

# ரத்துசெய்யும்படி முஹிடின் மனு

கோலாலம்பூர், செப். 20-

தமக்கு எதிராகச் சுமத்தப்பட்ட 20 கோடி ரிங்கிட் தொடர்பான சட்டவிரோத நாணயப் பரிவர்த்தனை மீதான 3 நீதிமன்ற வழக்குகளை ரத்துசெய்யுமாறு தமது வழக்கறிஞர்கள் கோலாலம்பூர் செஷன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைப் பதிவுசெய்வார்கள் என பெரிக்காத்தான் நேஷனல் தலைவர் டான்ஸ்ரீ முஹிடின் யாசின் கூறினார்.

ஜானா விபாவா வழக்கு விசாரணை நேற்று நீதிபதி அஸுரா அல்வி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது பெர்சத்து கட்சியின் தலைவர் டான்ஸ்ரீ முஹிடின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் டத்தோ ஹிஷாம் தே போ தெய்க் கூறினார்.

குற்றவியல் செயல்முறை சட்டத்தின் 173(ஜி) பிரிவின் கீழ் இந்த வழக்கு பதிவுசெய்யப்படும் என அவர் தெரிவித்தார். விரைவில் நாங்கள் இதற்கான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வோம் என்ற அவர் அதேவேளையில் டான்ஸ்ரீ முஹிடின் யாசினின் அனைத்துலகக் கடப்பிதழை மீண்டும் அவரிடம் ஒப்படைப்பதற்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்வோம் என அவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் டான்ஸ்ரீ முஹிடின் யாசின் (வயது 76) கலந்துகொள்ளவில்லை. அவர் இந்த விசாரணையில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு அவருக்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே முஹிடின் யாசின் எதிர்நோக்கி வந்த 4 ஊழல் குற்றச்சாட்டுகளையும் இந்த 3



சட்டவிரோத நாணயப் பரிவர்த்தனை மீதான வழக்குகளையும் ஒரேநேரத்தில் விசாரணை செய்வதற்கு இதற்கு முன்பு முடிவுசெய்யப் பட்டிருந்ததாக அரசுத் தரப்பு வழக்கறிஞரான டத்தோ வான் ஷஹாருடின் வான் நடின் கூறினார்.

எனினும் மனுதாரர் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு விண்ணப்பம் செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, முஹிடின் யாசினை விடுவித்த வழக்கிற்கு கடந்த ஆகஸ்டு 15ஆம் தேதி நாங்கள் மேல் முறையீடு செய்துள்ளதால் இவ்வழக்கை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்குமாறு தாங்கள் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வழக்கு விசாரணை இம்மாதம் 27ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளையில் முஹிடின் யாசின் எதிர்நோக்கிவரும் 3 சட்டவிரோத நாணயப் பரிவர்த்தனை வழக்கு உட்பட இதர 4 ஊழல் வழக்குகளையும் வரும் நவம்பர் 29ஆம் தேதி விசாரணை செய்யப்பட வேண்டும் என தாங்கள் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மடானி சுகாதாரத் திட்டத்தின் கீழ் 80,000 குடும்பங்கள் பயன்

கோலாலம்பூர், செப். 20-

அரசாங்கம் அறிவித்திருந்த மடானி சுகாதாரத் திட்டத்தின் வழி நாட்டிலுள்ள 80 ஆயிரம் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.



நாட்டில் அது அறிமுகப்படுத்தப் பட்டது முதல் இன்று வரை ஒரு லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிகிச்சைகள் நாட்டிலுள்ள தனியார் கிளினிக்குகளின் மூலம் பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 4 ஆயிரம் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதாகக் கூறிய அவர், இது நாளுக்கு நாள் அதிகரித்து வண்ணம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் சுமையைக் குறைப்பதற்காக அரசாங்கம் இந்த மடானி சுகாதாரத் திட்டத்தைத் தொடங்கியதாகக் கூறிய அவர், இத்திட்டத்தின் வழி நாட்டில் உள்ள பி40 தரப்பைச் சேர்ந்த குடும்பங்கள் தனியார் கிளினிக்குகளில் வெளிநோயாளிகளாக இலவசமான முறையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,300 தனியார் கிளினிக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நேற்று நாடாளுமன்றத்தில் 12ஆவது மலேசியத் திட்டத்தின் அரையாண்டுக்கால ஆய்வறிக்கை மீதான விவாதங்களுக்குத் தமது அமைச்சு மூலம் பதில் அளிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மக்களிடம் இருந்து ஆதரவு பெருகிவந்துள்ளதைத் தொடர்ந்து இம்மாதம் 15ஆம் தேதி முதல் அது நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மடானி சுகாதாரத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள கிளினிக்குகளில் தங்களைப் பதிவுசெய்துகொள்வதைத் தமது அமைச்சு வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள மக்கள் இலவசமான முறையில் தனியார் கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நாட்டிலுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதியிலுள்ள தனியார் கிளினிக்குகளில் இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்ய ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இத்திட்டத்தின் கீழ் தகுதிகொண்ட மக்கள் இவ்வாண்டு ஜூன் 15ஆம் தேதி முதல் டிசம்பர் 31ஆம் தேதி வரை இலவசமாகச் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 250 ரிங்கிட்டும் தனித்துவாழும் மூத்த குடிமக்களுக்கு 125 ரிங்கிட்டும் திருமணம் ஆகாத தனி நபர்களுக்கு 75 ரிங்கிட்டும் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் என்ற அவர், இத்திட்டத்தின் வழி குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நாட்டிலுள்ள தனியார் கிளினிக்குகளில் இலவசமாகச் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.